**நகராட்சி அலுவலகம்,**
**சாத்தூர்.**
**நாள்: 28.09.2022**

-----------------------------------------

## சாத்தூர் நகர்மன்றம் அவசரக்கூட்டம் அறிவிப்பு

**கூட்டம் எண். 6**

**நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053ம் வருடம் புரட்டாசி 13 ஆம் நாள் 2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30.09.2022ம் தேதியன்று வெள்ளிக்கிழமை மதியம் 4.30 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் அவசரக்கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**நகர்மன்றத் தலைவர்**
**சாத்தூர் நகராட்சி.**

**பொருள் எண்.1**

சாத்தூர் நகராட்சி இருக்கண்குடி நீர் உந்து நிலையத்தில் உள்ள மின்மோட்டார்கள் பழுதுடைந்தும் நீர் உறிஞ்சு குழாய்கள் முற்றிலும் உடைந்து குடிநீர் பம்பிங் செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே அதில் உள்ள பழுது மற்றும் மராமத்து பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.2,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மேற்கண்ட பணியினை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.2,00,000/—க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.644/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண்.96, நாள்: 30.09.2022**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட மேலக்காந்தி நகரில் உள்ள நகராட்சி தொடக்கப்பள்ளி கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. இக்கட்டிடத்தினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு சுமார் 8 ஆண்டுகளுக்கு மேலாகிறது. எனவே மேற்கண்ட பள்ளி கட்டிடத்தினை பழுது மற்றும்

மராமத்து பணிகளை மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.10,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மேற்கண்ட பணியினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.10,00,000/—க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.645/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.97, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.3</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் மின்னஞ்சல் செய்தியில் சாத்தூர் நகராட்சி பகுதியில் புதிய பாதாளச் சாக்கடை திட்டம் மற்றும் புதிய கூட்டு குடிநீர் திட்டப்பணிக்காக சேதப்படுத்தப்பட்ட சாலையினை சீரமைக்கும் பொருட்டு 2022—2023—ம் ஆண்டிற்கு தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ள ரூ.417.00 இலட்சத்திற்கு மதிப்பீட்டு குழுவினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன் பொருட்டு சாலை பணிகளை மேற்கொள்ளுவதற்கு கீழ்க்கண்டபடி மூன்று சிப்பங்களாக ரூ.417.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| SI. No | Name of work | Total No.of Road | Estimate Amount (Rs.in Lakhs) |
|---|---|---|---|
| 1 | Providing BT Surface using Paver Machine at Ward No. 1 Municipal School East Street (128001R014, L=113, W=2.80) Municipal School South Street (128001R015 L=64, W=4) Municipal School West Street (128001R016 L=251 W=3.80), Ward no.11, Gandhinagar Park Street (128011R157 L=60 W=4.20) Ward No.12 Vellakari Road (128012R162 L=720 W=7) Ward No. 18 Traveler Bungalow South Road (128018R184 L=111 W=8) Valavanthalpuram OHT Road (128018R185 L=256 W=6)Community Hall Street(128018R197 L=90 W=3.70) in Sattur Municipality. **(Packagae – I)** | 8 | 155.00 |
| 2 | Providing Surface using paver block at Manikandan Leth Steet (128007R104 L=125 W=2.60), Manikandan Leth Steet South Cross Street (128007R105 L=36 W=4.20), Pandian Chemical Backside street (128007R106 L=90 W=4.20), Senthilandavar Leth Street (128007S015 L=125 W=1.60), Senthilandavar Leth South Cross Street (128007S016 L=60 W=3.80), Rajagopal Mandapam Street (128007R107 L=132 W=2.80), Rajagopal Mandapam West Rationshop Street(128007S017 L=75 W=2.70), Rajagopal Mandapam West Street (128007L016 L=78 W=1.30), Rajagopal Mandapam South 1st Street (128007S018 L= 56 W=3),Rajagopal Mandapam South West Cross Street | 35 | 130.00 |

| | | | |
|---|---|---|---|
| | (128007S019 L=58 W=3.20),Rajagopal Mandapam South 2nd Street (128007R108 L=56 W=4), Gandhinagar North 3rd Street (128008S022 L=147 W=1.70),Gandhinagar North 4th Street (128008R115 L=150 2.70),Gandhinagar North 5th Street(128008R116 L=153 W=2.80),Gandhinagar North 6th Street (128008S023 L=158 W=2.40),Gandhinagar North 7th Street (128008S024 L=83 W=1.70),little Buds School South Cross Street (128008R118 L = 82 W=3.80),SVN Thottam West 1st lane(128010S025 L= 28 W=3.20),Gandinagar Street(128010R143 L=207 W= 2.70),SVN Thottam West 2nd Street(128010R144 L=80 W=2.70),SVN Thottam West 3rd Street(128010R145 L=78 W=3.10),SVN Thottam West 4th Street(128010S026 L=90 W=2.40),SVN Thottam West 5th Street(128010S027 L=117 W=2.40),Gandinagar South 1st Street(128010R146 L=150 W=4.80),Gandinagar South 2nd Street(128010S028 L=155 W=2.40),Gandinagar South 3rd Street(128010R147 L=142 W=3.10),Gandinagar South 4th Street(128010S029 L=135 W=1.80),Gandinagar North 1st Street(128010S030 L=90 W=2.00),Gandinagar North 1st Cross Street(128010R148 L=48 W=3.00),Gandinagar North 2nd Street(128010R149 L=90 W=4.10),Vellakarai Road EB Tower Street(128010R150 L= 107 W=6.40),EB Tower North Cross Street(128010R151 L=59 W=4.50),Vellakari Road South 1st Street(128011R152 L=105 W=4.20),Kaliamman Keela Street(128011S031 L=95 W=2.30),Kaliamman Kovil Street(128011S032 L=24 W=2.90) in Sattur Municipality. **(Package - II)** | | |
| 3 | Providing Surface using Paver block at Ward No. 12 Andalpuram 6th Cross Street(128012S042 L=244 W=2.60),Andalpuram 6th Street West 1st Street (128012S043 L=30 W=2.80),Andalpuram 6th Street West 2nd Street (128012S044 L=30 W=3.00),SVN Thottam Road(128012R163 L=254 W=3.70),SVN Thottam East 1st Lane(128012R164 L=37 W=4.00 ),SVN Thottam East 2nd lane(128012S045 L=37 W=2.80), Ward No.15 Munisf Court West Street(128015S053 L=150 W=3.90), Ward No,.18 St. Stanislaus High School north Street(128018R187 L=147 W=5.20), Chetiyarmall Southnorth Road(128018R188 L=40 W=4.80), Chetiyarmall North Street (128018R189 L=82 W=4.70), Chetiyarmall South treet (128018R190 L=163 W=4.50), Nenmeni Road 1st Street (128018R191 L=113 W=3.60), Nenmeni Road 1st Street West 1st Cross Street(128018R192 L=75 W=2.90), Nenmeni Road 1st Street West 2nd Cross Street(128018R193 L=48 W=3.70),Nenmeni Road 2nd street(128018R194 L=102 W=3.00), Nenmeni Road 3rd Street(128018R195 L=90 W=2.90), Nenmeni Road 4th Street (128018R196 L=77 W=3.60),Old Gas Company Street(128018S068 L=89 W=4.00),Railway Subway Street(128018R198 L=140 W=3.80), Railway Subway 2nd Cross Street(128018R200 L=45 W=5.50), TELC Hostel Easternwest | 34 | 132.00 |

| | | | |
|---|---|---|---|
| | street(128018R201 L=90 W=3.80),3rd STP Road (128018R203 L=60 W=5.00), Ward no. 21 Pillaiyar Kovil Street(128021R223 L=267 W=8.70),Pillaiyar Kovil South mada Veethi (128021R224 L=41 W=4.20),Pillaiyar Kovil North mada Veethi(128021R225 L=41 W=5.50),Pillaiyar Kovil North 1st Cross Street(128021L041 L=68 W=1.80),Pillaiyar Kovil Middle Street(128021R226 L=98 W=6.20),Saraojni Street(128021L043 L=96 W=2.60), Pattiyanchetti Street(128021L044 L=104 W=2.90), Ward No.23 Bangalow Meela street(128023S081 L=100 W=3.40), Muslim street(128023L048 L=60 W=2.90), L.F Well keela Street(128023R241 L=112 W=65.00),L.F Well Street(128023S082 L=87 W=3.60) in Sattur Municipality **. (Package - III)** | | |
| | **Total** | **77** | **417.00** |

<u>அலுவலக குறிப்பு:</u>

நகராட்சி பகுதியில் புதிய பாதாளச் சாக்கடை திட்டம் மற்றும் புதிய கூட்டு குடிநீர் திட்டப்பணிக்காக சேதப்படுத்தப்பட்ட சாலையினை சீரமைக்கும் பொருட்டு **2022–2023–ம்** ஆண்டிற்கு தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ள ரூ.**417.00** இலட்சத்திற்கு சாலை பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதியினை பெறவும் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று சமர்ப்பிக்கப்பட்டமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம் **(ந.க.எண்.618/2022/எம்1)**

**நகர்மன்றத் தீர்மானம் எண்.98, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.4</u>**

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட இருக்கண்குடி டேமில் உள்ள தெற்கு பகுதியில் உள்ள உறைகிணறு Unit - II 12.5 HP Sub Motor மற்றும் வடக்கு பகுதியில் உள்ள உறைகிணறு Unit - II 7.5 HP Sub Motor பழுது ஏற்பட்டுள்ளதை 15.09.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கெங்கா எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் - ரூ. 71,900/-
2. மகேஸ்வரி எலக்ட்ரிக்கல்ஸ் - ரூ. 78,170/-

<u>அலுவலக குறிப்பு:</u>

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள கெங்கா எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 587/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.99, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.5</u>**

சாத்தூர் நகராட்சி உள்ளூர் குடிநீர் ஆதாரமான இருக்கண்குடி நீர்தேக்கத்தில் உள்ள சம்பில் உள்ள பைப் லையன்கள் உடைந்து உள்ளது மற்றும் அதில் உள்ள 12எச்.பி 2 மோட்டார்களும் பழுது ஏற்பட்டுள்ளது அதனை பழுது நீக்கம் பணி செய்வதற்கு 15.09.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கெங்கா எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் - ரூ. 58,686/-
2. சாந்தா ஸ்பேர் & சர்வீஸ் - ரூ. 60,700/-

<u>அலுவலக குறிப்பு:</u>

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள கெங்கா எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 361/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.100, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.6</u>**

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட பைபாஸ் டேங்கில் உள்ள 25 HP Horizontal Split Cosing Pump Sub Motor பழுது ஏற்பட்டுள்ளதை பழுது நீக்கம் செய்வதற்கு 15.09.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கெங்கா எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் - ரூ. 52,800 /-
2. சாந்தா ஸ்பேர் & சர்வீஸ் - ரூ. 54,200/-

<u>அலுவலக குறிப்பு:</u>

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள கெங்கா எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 581/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.101, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.7</u>**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வைப்பாற்றில் உள்ள உறை கிணற்றில் 12” பைப் பிளேட் பொருத்தி குடிநீரினை தலைமை நீரேற்ற நிலையத்திற்கு பம்பிங் செய்வதற்கு தேவையான சாமான்கள் பொருத்தி பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள

ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.48,000-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 728/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.102, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.8</u>**

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள மினி டேங்கர் லாரி TN 67B 7759 வண்டிக்கு 03.10.2022 உடன் தகுதி சான்று முடிவு பெறுவதால் அதனை புதுப்பிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பழுதுகளை மதுரை டிவிஎஸ் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.95,000-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. வாட்டர் சர்வீஸ், இன்ஜின் ஆயில், டீசல் பிர்டர் புதியது மாற்ற வேண்டும்.
2. கியர் ஆயில், கோரஸ் ஆயில் டாப்பப் செய்ய வேண்டும்.
3. ஸ்டோரிஸ் ஆயில், பிரேக் லையனிங் செக்கப் செய்து வேலை பார்க்க வேண்டும்.
4. 100 ஆம்ஸ் பேட்டரி, 1 ¾ஏஸ் 100அடி, 1.5MM லயர் 100 அடி புதியது வேண்டும்.
5. கிளட்ச் பிளேட், செண்டா செய்ய வேண்டும்.
6. 1 ½ இன்ஸ் வால்வு 3 புதியது வேண்டும்.
7. கியர் ராடு வேலை பார்க்க வேண்டும் ரேடியேட்டர் செக்கப் செய்ய வேண்டும்.
8. தண்ணீர் டேங்க் பகுதி வண்டியின் உள் மற்றும் வெளி வேலை பார்க்க வேண்டும்.
9. கம்ளிட் எலக்ட்ரிகள் வேலை பார்க்க வேண்டும்.
10. பெயிண்டிங் அடித்து அரசு வாசகங்கள் எழுத வேண்டும்.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 730 /2022/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.103, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.9</u>**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட மேலக்காந்தி நகரில் உள்ள நகராட்சி தொடக்கப்பள்ளி கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. இக்கட்டிடத்தினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவோ அல்லது கட்டிடத்தினை இடித்து விட்டு புதிய பள்ளி கூடம் கட்டுவதற்கான

தரச்சான்றினை அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலி அவர்களிடமிருந்து ஆய்வு செய்து பெறுவதற்கு அதற்கான கட்டணம் ரூ.17,700/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட செலவு தொகையினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதித்து அங்கீரிக்கலாம்.

(ந.க.எண்.645/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.104, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

சாத்தூர் நகராட்சியினால் 75—வது சுதந்திர தினவிழாவினை முன்னிட்டு மத்திய மாநில அரசுகளால் சீரும் சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. அதன் பொருட்டு கலை நிகழ்ச்சி மேடை, சாமியான பந்தல், ஒலி பெருக்கி பார்வையாளர்களுக்கு இருக்கை வசதி மற்றும் நகராட்சி அலுவலகத்தில் மூன்று தினங்கள் வண்ண விளக்குகள் (தேசிய கொடி வண்ணத்தில்) அமைத்தவைக்கு அதற்கான செலவு தொகை ரூ.54,480/—னை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதிகளின் கீழ் செய்தமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு:

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண் 754/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.105, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.11**

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டு பகுதிகளில் அமைந்துள்ள 12,678 குடியிருப்புகள், 1,249 வணிக நிறுவனங்கள், 60 தொழிற்சாலைகள் ஆகியவற்றிலிருந்து 9.5 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் தினசரி சேகரமாகிறது. தினசரி நகராட்சி துப்புரவு பணியாளர்கள் மற்றும் தனியார் ஒப்பந்த பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இவற்றில் மக்கும் கழிவுகள் 5.7மெட்ரிக்டன் மற்றும் மக்காத கழிவுகள் 3.8மெட்ரிக்டன் ஆகும்.

இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் 5.7 மெட்ரிக் டன் மக்கும் கழிவுகளை இந்நகராட்சியின் 2 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நுண் உரக்குடில்கள் மூலம் உரமாக்கப்பட்டு வரப்படுகிறது. மேற்படி, இந்நகர் பகுதிகளில் 24 வார்டுகளில் தினசரி சேகரமாகும் 9.5 மெட்ரிக் டன் திடக்கழிவுகளை வீடு வீடாக சென்று மக்கும் கழிவுகள் மற்றும் மக்காத கழிவுகள் என பிரித்து வாங்கும் பணிகளை மேற்கொள்ளும் தூய்மைப்பணியாளர்கள் பயன்படுத்தி வரும் தள்ளுவண்டிகள் தேய்மானம் அடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மேற்படி, தினசரி திடக்கழிவுகளை சேகரிக்கப் பயன்படுத்தப்பட்டு வரும் 53 எண்ணம் மூன்று சக்கர தள்ளுவண்டிகள் வாங்கி கிட்டத்தட்ட 10 ஆண்டிற்கு மேலாகிறது. மேற்படி, 53 தள்ளுவண்டிகளின் வீல்கள் அனைத்தும் பழுதடைந்து உள்ளது. மேற்படி, 53 தள்ளுவண்டிகளின் பழுதடைந்துள்ள வீல்களை புதியதாக மாற்றவும், இதர பழுதுகளை சரி செய்யவும்

தள்ளுவண்டி ஒன்றிற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.3500/- வீதம் 53 வண்டிகளுக்கு உத்தேசமாக செலவினத் தொகை ரூ.1,75,000/-க்கும் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தற்போது உபயோகத்தில் உள்ள 53 தள்ளுவண்டிகள் வாங்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாகிறது. தள்ளுவண்டிகளின் சக்கரங்கள் மற்றும் இதரபாகங்கள் பழுதடைந்துள்ளதால் அதனை பழுதுநீக்கம் செய்யவும், புதிய சக்கரங்கள் பொருத்தவும் தள்ளுவண்டி ஒன்றிற்கு ரூ.3500/-க்கும், மேற்படி பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.733/2022/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.106, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.12</u>**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 118-ன்படி தொழில்வரி வசூல் செய்ய முடியாத (Power to write off irrecoverable taxes) திரும்ப பெற முடியாத வரிகளை தள்ளுபடி செய்யும் அதிகாரத்தின்படி இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 24 வார்டுகளில் உள்ள தொழில்வரி கேட்பு நிலுவை கேட்புகளுக்கு பல முறை அறிவிப்புகள் அனுப்பியும் நேரில் சென்று பார்வையிட்ட பொழுது ஏற்கனவே தொழில்வரி நிர்ணயம் செய்த நிறுவனங்கள் தற்பொழுது அந்த இடத்தில் இல்லாததினால் வசூல் செய்ய இயலாத நிலை உள்ளது. ஆதலால் 14.07.2022-ம் தேதிய வருவாய் ஆய்வாளர், சிறப்பு வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர்களின் குறிப்பின்படி 2016-2017-ம் ஆண்டு முதல் 2022-2023-ம் ஆண்டு வரை குறிப்பிட்டுள்ள வசூல் செய்ய இயலாத கேட்பு தொகை ரூ.1,91,430/-ஐ கணினியில் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

<u>அலுவலக குறிப்பு:</u>

இந்நகராட்சியின் தொழில்வரி 100 சதவீதம் வசூல் செய்யும் பொருட்டு வசூல் செய்ய இயலாத தொகை ரூ.1,91,430/-க்கான தொழில்வரி கேட்புகளை நீக்கம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.107, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.13</u>**

இந்நகராட்சியின் 2021-2022ம் ஆண்டுக்குரிய நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.356/2010/சி1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.108, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண்.14</u>**

இந்நகராட்சியின் மூலம் தூய்மைப் பணியாளர்களுக்கு 36 குடியிருப்புகள் கட்டப்பட்டு. பயன்பாட்டில் உள்ள குடியிருப்புகளில் சில தூய்மைப் பணியாளர்கள் ஓய்வுபெற்ற நிலையில் 10 குடியிருப்புகள் காலியாக உள்ளது. இந்நிலையில் மூலதன மானிய நிதியின் கீழ் அலுவலகத்திற்கு அருகில் தூய்மைப் பணியாளர்கள் குடியிருப்பதற்கு புதியதாக 12 எண்ணம் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் போதுமான தூய்மைப்பணியாளர்கள் இல்லாததால் புதிதாக கட்டப்பட்ட மேற்படி குடியிருப்புகளில் இந்நகராட்சி பணியாளர்களுக்கு வாடகை அடிப்படையில் வசிப்பதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.576/2022/சி1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.109, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) ச.குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**